| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம்**<br>**வடக்கு மாகாணம்.**<br>**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016** | |
| **தரம் : 11** | **தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**<br>பெயர் / சுட்டெண் ............................................... | **நேரம் :**<br>**1.00 மணி** |

## பகுதி - I

**பின்வரும் வினாக்களிற்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01. தொடர்பாடலின் வகைகள் வகை பிரிக்கப்படும் போது அதற்கு அடிப்படையாக அமைவது?
   1) ஊடகங்களின் எண்ணிக்கை    2) கால வரையறை
   3) தொடர்பாடலின் நோக்கம்    4) பெறுநர்களின் எண்ணிக்கை

02. கூட்டுத்தொடர்பாடல் ஒன்றில் எறிவை மற்றும் எறிவையற்ற ஊடக உபகரணங்கள் பயன்படுத்தப் படுகின்றன. பின்வருவனவற்றில் எறிவையற்ற ஊடக உபகரணங்களில் **உள்ளடங்காதது.**
   1) பக்கம் புரட்டி    2) அறிவித்தல் பலகை
   3) ஊடாடுகைப் பலகை    4) காந்தப் பலகை

03. செய்திப் பத்திரிகைகளில் மொழியின் பயன்பாடு தொடர்பான இயல்புகளில் **பொருத்தமற்றதாக** அமைவது
   1) எளிமையான மொழி வடிவத்தில் எழுதப்பட்டிருத்தல்.
   2) உயர்ந்த மொழி வடிவத்தில் எழுதப்பட்டிருத்தல்.
   3) மரபு சார்ந்த துறைகளிலிருந்து வேறுபட்டிருத்தல்.
   4) எழுதும் தன்மைக்கேற்ற விதத்தில் மொழியின் வடிவத்தை மாற்றியமைத்தல்.

04. வானொலி ஊடகத்திற்கான பிரதியை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய நிபந்தனை **அல்லாதது**
   1) ஒலி அடிப்படை    2) தொடர்பாடல் அடிப்படை
   3) செவிமடுக்கும் அடிப்படை    4) காட்சி அடிப்படை

05. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமானது 1982 இல் எவ் நாட்டு அரசு வழங்கிய நன்கொடை யின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது?
   1) சீனா    2) அமெரிக்கா
   3) கனடா    4) ஜப்பான்

06. தகவல்களை ஊடுகடத்தும் முறைகள் காணப்படுகின்றன.
   A - குறுஞ் செய்தி
   B - சாதாரண தபால் சேவை
   C - மின்னஞ்சல்
   D - செல்லிடத் தொலைபேசி சேவை
   இவற்றுள் ஆளிடைத் தொடர்பாடலுக்கு பயன்படுத்தக் கூடிய முறைகள் எவை?
   1) A, B மாத்திரம்    2) A, B, C, D மாத்திரம்
   3) C, D மாத்திரம்    4) A, B, C, D எல்லாம்

07. புலக்காட்சியைப் பாதிக்கும் விடயம் **அல்லாதது**
   1) பெறுநரின் அனுபவப்பின்புலம் செய்தியுடன் பொருந்துதல்.
   2) செய்திகள் பல்வேறுபட்ட நிலையில் காணப்படல்.
   3) செய்தியில் தகவல் திரிபடைதல்.
   4) தவறான வழியில் தகவல்கள் செய்திகளாக மாற்றமடைதல்.

08. தினசரிச் செய்திப்பத்திரிகை ஒன்றில் முதற்பக்கத்தில் வெளியிடப்படும் செய்திகள் எவ்வாறழைக்கப்படும்?
   1) உத்தியோகபூர்வ செய்திகள்
   2) வன் செய்திகள்
   3) மென் செய்திகள்
   4) அரச செய்திகள்

09. வெகுஜன ஊடகத்தின் மீது பொதுமக்களின் முறைப்பாடுகளை பெறல் மற்றும் விசாரித்தல், தீர்ப்பினைப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றிற்கு உதவும் நிறுவனம்
   1) இலங்கை மனித உரிமை ஆணைக்குழு
   2) இலங்கை பத்திரிகைச் சபை
   3) இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம்
   4) இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்

10. முறைசாரா தொடர்பாடலின் இயல்புகளாக அமையக் கூடியவை
   A – முறையான திட்டத்திற்கிணங்க செயற்படுபவை.
   B – திடீரென ஒன்றுகூடுபவரிடையே நிகழ்வது.
   C – நோக்கம், இலக்கு கொண்டவை.
   D – நெகிழ்ச்சி வாய்ந்தது.
   1) A, C மாத்திரம்
   2) B, D மாத்திரம்
   3) A, B, C மாத்திரம்
   4) B மாத்திரம்

11. பத்திரிகைத் துறையிலுள்ளோர் தொடர்பான சில கூற்றுக்கள் வருமாறு.
   அமல் :- செய்திப் பத்திரிகையின் பதிப்பு வாக்கியம் எழுதுதல் செயற்பாடு.
   நிமல் :- பத்திரிகையின் உள்ளடக்கம், கட்டமைப்பு தொடர்பான பொறுப்பு வகித்தல்.
   அருண் :- பத்திரிகை வெளியீட்டின் இறுதிப் பொறுப்புக் கூறல்.
   மேல்வரும் கூற்றுக்களோடு தொடர்புடைய பத்திரிகைத்துறை சார்ந்தவர் யார்?
   1) ஒப்பு நோக்குனர்
   2) செய்தி ஆசிரியர்
   3) பிரதம ஆசிரியர்
   4) பக்க வடிவமைப்பாளர்

12. தொலைக்காட்சியில் திரைப்படம் ஒன்றைப் பார்த்த கமலா அதில் உள்ள நடிகையைப் போன்று தானும் ஆடை அலங்காரங்களை மாற்றியமைத்தாள். இவ்வாறு அவள் தன்னை மாற்றியமைத்தமை எவ்வகை தொடர்பாடலில் உள்ளடங்கும்?
   1) சிறு குழுத் தொடர்பாடல்
   2) ஆளிடைத் தொடர்பாடல்
   3) ஆளுள் தொடர்பாடல்
   4) வெகுஜனத் தொடர்பாடல்

13. வானொலி ஊடகத்தைப் பயன்படுத்தும் போது பின்வரும் பண்புகளை கவனத்தில் கொள்ள வேண்டுமென மாலா தனது தங்கைக்கு கூறினாள்
   A - வானொலி கேட்டல் ஊடகம்.
   B - ஒரு வழிப்பாதைக்கு அதிகம் வழிவகுக்கும்.
   C - செம்மையான உயர்குடிமொழி பயன்படுத்தப்படல்.
   D - ஆக்கப்பணிகளுக்கு ஏற்ற நுட்பங்கள் பயன்படுத்தப்படல்.
   மேற்கூறியவற்றில் உண்மையானவை
   1) A, C, D மாத்திரம்
   2) A, B, D மாத்திரம்
   3) A, D மாத்திரம்
   4) A, B, C, D எல்லாம்

14. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முதல் சிங்களப் பத்திரிகை பின்வருவனவற்றுள் எது?
   1) லங்கா லோகய
   2) கொழும்பு ஜேர்னல்
   3) உதய தாரகை
   4) லக்மினி பஹன

15. செய்திப் பத்திரிகையொன்றின் பெறுமதியை பாதிக்காத காரணியைத் தெரிக.
   1) தாக்கமும் முக்கியத்துவமும்
   2) சாதாரண தன்மை
   3) முரண்பாடுகள்
   4) அண்மித்த தன்மை

16. வாய்மொழியல்லாத் தொடர்பாடல் குறித்த தகவல்கள் வருமாறு:-

கமல் :- வாய்மொழி மற்றும் வாய்மொழியற்ற தொடர்பு இரண்டும் குறியீட்டுத்தன்மை கொண்டவை.

மது :- உரையாடலின் போது சொற்களை உச்சரிப்பதும் தரவின் தொனியும் வாய்மொழியல்லா தொடர்பில் முக்கியமானவை.

கீதா :- முயற்சியின்றி வாய்மொழியல்லா தொடர்பு இடம்பெறும்.

ரவி :- முகபாவனை, கண்தொடர்பு, உடல்த்தோற்றம் என்பனவும் இத்தொடர்பில் முக்கியமானவை.

மேற்கூறப்பட்டவற்றில் வாய்மொழியல்லாத் தொடர்பு தொடர்பான சரியான கருத்துக்களை முன்வைத்தோர்

1) கமல் மற்றும் ரவி
2) கமல், மது மற்றும் ரவி
3) மது மற்றும் கீதா
4) கமல், மது, கீதா மற்றும் ரவி

17. பின்வருவனவற்றுள் நாணயக்கணக்கீட்டு இயந்திரத்தின் இயல்பு / நன்மை **அல்லாதது**

1) நாணயத்தாள்களின் பெறுமதியை உடனடியாக கணித்துக் கூறும்.
2) போலி நாணயத்தாள்களை வேறுபடுத்த முடிதல்.
3) வேறுபட்ட அனைத்து வகையான நாணயத்தாள்களையும் ஒரே முறையில் இட முடிதல்.
4) நாணயத்தாள்களை எண்ணும் நேரத்தைக் குறைக்கச் செய்யும்.

18. ஆளுநர் சேர். ஸ்ரீயூகினிபட் அவர்களால் இலங்கையில் உத்தியோகபூர்வ வானொலிச் சேவை ஆரம்பிக் கப்பட்டது. இதுவே முதலில் ஆசியாவில் உருவாக்கப்பட்ட வானொலிச் சேவையாகவும் கருதப்பட்டது. அச் சேவை உருவாக்கப்பட்ட ஆண்டு யாது?

1) 1924 ஜுன் 24
2) 1924 டிசம்பர் 1
3) 1925 டிசம்பர் 16
4) 1926 ஜுன் 1

19. "டப்லொயிட்" பத்திரிகைகளுக்கு உதாரணமாக **அமையாதது**?

1) பேலினர்
2) சரசவிய
3) மிகிரி
4) வானவில்

20. உலகின் முதன்முதலில் அச்சுக்கலைக்கு அடிப்படையான கடதாசி உற்பத்தி செய்த பெருமை யாரைச் சாரும்?

1) ஜொகானஸ் உடன் பேர்க்
2) மெக்லுஹன்
3) ட்சாயி லுாண்
4) கிரகம்பெல்

21. A - D.R விஜேயவர்த்தன

B - சார்ளி சப்ளின்

C - ரூல்ப் கிங்க்

D - மார்க்கோனி

பின்வருவோர் தொடர்புபடும் துறைகளை முறையே இனங்காண்க.

1) A - நாடகத்துறை, B - பத்திரிகைத்துறை, C - திரைப்படத்துறை, D - வானொலித்துறை
2) A - பத்திரிகைத்துறை, B - திரைப்படத்துறை, C - நாடகத்துறை D - வானொலித்துறை
3) A - திரைப்படத்துறை, B - வானொலித்துறை, C - நாடகத்துறை, D - பத்திரிகைத்துறை
4) A - பத்திரிகைத்துறை, B - நாடகத்துறை, C - திரைப்படத்துறை, D - வானொலித்துறை

22. தொடர்பாடல் செயன்முறையில் பின்னூட்டல் இடம்பெறுவது

1) அனுப்புனரிடம்
2) செய்தி தகவலில்
3) ஊடகத்தில்
4) பெறுநரிடத்தில்

23. செய்தியொன்றில் நம்பகத்தன்மை உருவாக்கப்படும் விதம் பற்றி எளிய சமன்பாடு முறையினை வெளி யிட்ட யுனெஸ்கோ தொடர்பாடல் நிபுணர் யார்?

1) ஜீலியோ பெட்ரோனி
2) ரூல்ப் கிங்க்
3) ஜொகானஸ்கூடன் பேர்க்
4) டி மெசுனியர்

24. வானொலி ஊடக வரையறை தொடர்பிலான **தவறான** கூற்றை இனங்காண்க.
   1) ஆழமான கருத்துக்களை வானொலி ஊடகப் பெற முடியும்.
   2) வானொலியில் மறுஒலிபரப்பு சந்தர்ப்பம் இல்லை.
   3) செவிமடுப்போரின் கவனம் திசை திரும்பக் கூடிய நிலை அதிகம்
   4) புகைப்படம், அட்டவணை மூலம் விளக்கத்தை பெறமுடியாத தன்மை.

25. பின்வருவனவற்றில் கீழிருந்து மேல் நோக்கிய தொடர்பாடல் செயன்முறை வழிமுறைகளாக அமைவன
   1) அறிவித்தல், விசாரணை, முன்மொழிவுப்பெட்டி
   2) கலந்துரையாடல். சுற்றறிக்கை, கூட்டம்
   3) முன்மொழிவுப்பெட்டி, அறிவித்தல், கலந்துரையாடல்
   4) முன்மொழிவுப்பெட்டி, கலந்துரையாடல், குறைகேள் அதிகாரி நியமித்தல்.

26. பின்னூட்டல் தாமதமாக கிடைத்தாலும் அதிகளவில் கிடைக்கும் தொடர்பாடல் வகை
   1) ஆளிடைத் தொடர்பாடல்
   2) வெகுஜனத் தொடர்பாடல்
   3) குழுத் தொடர்பாடல்
   4) அகமுகித் தொடர்பாடல்.

27. எழுத்தழுத்தல் அச்சுப்பதித்தல் முறையில் ஜொஹானஸ்கூடன் பேர்க்கினால் உருவான முதல் நூல் எது?
   1) இலத்தின் பைபிள்
   2) லங்கா கேகய
   3) லக்மினி பஹன
   4) இலத்தீன் இலக்கணம்

28. பெறுநர்களின் இயல்புகள் சில கீழே தரப்படுகின்றன.
   A - ஊடகத்தில் முன்வைக்கப்படும் விடயங்களை தமது தேவைப்பாட்டுக்கிணங்க தெரிந்தெடுத்து நுகர்வு செய்வோர்.
   B - ஊடகம் மீது வரையறையற்ற நம்பிக்கையை கொண்டிருப்போர்.
   C - இலத்திரனியல் ஊடகங்களுக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புக்களைப் பெற்று கோரல்களை முன்வைப்போர்.
   D - ஊடகங்களோடு நிலையான தொடர்பை வைத்திருப்போர்.

   மேற்கூறிப்பிட்டவற்றில் செயற்படாத பெறுநர், செயற்படுகின்ற பெறுநருக்கு பொருந்தும் கூற்று சரியான முறையில் தெரிக.
   1) A - செயற்படு பெறுநர், B - செயற்படாத பெறுநர், C - செயற்படு பெறுநர், D - செயற்படாத பெறுநர்
   2) A - செயற்படபடாத பெறுநர், B - செயற்படாத பெறுநர், C - செயற்படாத பெறுநர், D - செயற்படு பெறுநர்
   3) A - செயற்படு பெறுநர் B - செயற்படாத பெறுநர், C - செயற்படாத பெறுநர், D - செயற்படாத பெறுநர்
   4) A - செயற்படு பெறுநர், B - செயற்படாத பெறுநர், C - செயற்படாத பெறுநர், D - செயற்படு பெறுநர்

29. செய்திகள் பற்றி பல்வேறு அறிஞர்களும் பல்வேறு வரவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவ் வகையில் "எல்லா உத்வேகமான புதினங்களே செய்திகள்" என கூறிய அறிஞர்?
   1) போல்டி மெசுனியர்
   2) மில்ரன் பிரபு
   3) D. வவிஜேயவர்தனை
   4) சார்ளஸ் அண்டர்ஸன்

30. 1948 இல் ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லிவினால் முன்வைக்கப்பட்ட மாதிரியானது
   1) தொடர்பாடலின் அம்சங்கள் பற்றி குறிப்பிடுகிறது.
   2) தொடர்பாடலில் வழிமாற்றம் தொடர்பில் கவனம் செலுத்துகிறது.
   3) தொடர்பாடலில் இடையூறு பற்றி குறிப்பிடுகிறது.
   4) நேர்வழித் தொடர்பின் இயல்புகளை குறிக்கின்றது.

31. கணனி அச்சியந்திரங்களின் பல்வேறு வகை தொடர்பில் ஊடக கழக மாணவர்களால் பல்வேறு கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டது.

கமல்:- உயர் தொழினுட்பத்துடன் கூடியவாறு கணனியுடன் தொடர்புபடுத்தி பிரதிகளை பெறமுடியும்.

நிமல்:- புத்தகம் ஒன்றின் அனைத்து பக்கங்கள் தொடராகவும் முறையாகவும் அச்சுப் பிரதியாக்கலாம்.

மது:- கறுப்பு, வெள்ளை போன்ற வர்ணங்களுடன் கூடிய நிழற்பிரதிகளை மிக அதிக எண்ணிக்கையில் பெறமுடியும்.

இக் கூற்றுக்களுடன் தொடர்புடைய கணனி அச்சியந்திரம் யாது?

1) இலக்க முறை பிரதியெடுக்கும் அச்சியந்திரம் (Digital Duplicator)
2) புகைப்பட / நிழற்பிரதி இயந்திரம்
3) லேசர் இயந்திரம்
4) டொட் மட்ரிக்ஸ் அச்சியந்திரம்

32. “தனது கருத்தை கூற வெளியிட சகல தனிநபருக்கும் உரிமை உண்டு. பிறர் தடை இன்றி தம் கருத்தை வெளியிடவும் தேச எல்லை கடந்து எந்த ஊடகம் வழியாகவும் தகவலைப் பெற வழங்க உரிமை உண்டு” எனும் கூற்று உள்ளடக்கப்பட்டிருப்பது

1) இலங்கை பத்திரிகைச்சபை சட்டத்தில்.
2) இலங்கை குடியரசின் அரசியமைப்பில்
3) மனித உரிமை சாசனத்தில்
4) சொத்துரிமை சட்டத்தில்

33. தகவல்களை சேகரிக்கும் நுட்பமுறைகளில் ஆவணப் பரிசீலனையும் ஒன்றாகும். ஆவணப் பரிசீலனைக்கு உதாரணமாகக் கொள்ள **முடியாதது.**

1) சம்பாவினை
2) சம்பவக் குறிப்பேடு
3) வரவு இடாப்பு
4) புள்ளி விரபம் திரட்டும் படிவம்

34. தொலைக்காட்சி செய்தி பற்றிய **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவு செய்க.

1) ஊடக அலைவரிசைகளிடையே போட்டி காணப்படும்.
2) பெரும்பாலும் நேரடி நிகழ்வாக ஒளிபரப்பாகும்.
3) வானொலி செய்தியை விட மிக வேகமானது.
4) ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் காட்சி பிம்பங்கள் இணைக்கப்பட்டிருக்கும்.

35. கமரா ஒன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய பிரதிகளில் உள்ளடங்காதது

1) வில்லை (Lense)
2) எதிர்படலம் (Negative)
3) வில்லை தூரம் (Aperture)
4) துவாரப் படலை (Shutter)

36. ஊடக விமர்சனத்தின் அடிப்படை இலக்காக அமைய வேண்டியது

1) வெகுஜன ஊடக செய்திகளின் நன்மை, தீமையை சுட்டிக்காட்டல்.
2) ஊடக செய்திகளின் தவறுகளை மட்டும் சுட்டிக் காட்டல்.
3) வெகுஜன ஊடக செய்திகளை விமர்சனத்திற்குள்ளாக்குதல்.
4) பெறுநர்களிடத்தில் வெகுஜன ஊடகச் செய்திகளினை பிரபல்யமடையச் செய்தல்.

37. ஊடக சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முன்னின்று உழைத்த சமூகவாதிகளில் உள்ளடங்காதவர்கள்

1) ஜோன் மில்டன்
2) தோமஸ் ஜெபர்சன்
3) ஸ்டுவர்ட் மில்
4) கபரீரியன் ஆமன்ட்

38. கருத்தரங்கு ஒன்றில் புத்தம் ஒன்றிலிருந்தான குறித்த வரைபடம் ஒன்றினை மாணவர்களுக்கு காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் உடனடியாக பயன்படுத்தப்படக் கூடியது

1) துரத எறிவை
2) பல்லூடக எறிவை
3) மேந்தலை எறிவை
4) வழிக்கு எறிவை

39. புகைப்பபடபடல நாடா கமராவினை விட எண்மான (Digital) கமராக்கள் முக்கியமாக இருப்பது

1) உடனடியாகப் பார்வையிடமுடியும் என்பதால்.
2) இலகுவாக சேமிக்கலாம் என்பதால்.
3) அதிகமானோருக்கு அனுப்பலாம் என்பதால்
4) பெரிதாக்கி அச்சிடலாம் என்பதால்

40. தகவல்களை சேகரிக்கின்ற ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்பல்லாதது

1) ஒழுக்கமுடைமை
2) நேரந்தவறல் இன்மை.
3) தந்திரோபாய தன்மையின்மை
4) பொறுமையற்றல் இன்மை

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016


| தரம் : 11 | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

## பகுதி - II

**பின்வரும் வினாக்களில் முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களினையும் உள்ளடக்கி எல்லாமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

01. *சிறுவயதிலிருந்து தொலைக்காட்சி ஊடகத்தில் ஒளிபரப்பாகும் கிரிக்கட் விளையாட்டை அதிகமாக பார்த்து வந்த ரவி வளர்ந்ததும் பாடசாலையின் கிரிக்கட் அணியில் இணைந்து பயிற்சி பெற ஆரம்பித்தான்.*

1) தொலைக்காட்சி ஊடகத்தின் தனித்துவமான இயல்புகள் இரண்டு தருக.
2) பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய வெகுஜன ஊடகங்களின் இரண்டு பிரதான வகையைக் குறிப்பிட்டு, அவ்வகைக்குள் உள்ளடங்குபவையும் முறையே குறிப்பிடுக.
3) ரவி அப்பாடாசாலையின் கிரிக்கட் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டான். ரவியின் தலைமையில் இயங்கும் கிரிக்கட் அணியில் இடம்பெறும் பிரதான தொடர்பாடல் வகையை பெயர் குறிப்பிட்டு, அதன் பண்புகள் மூன்று தருக.
4) கிரிக்கட் விளையாட்டின் போது பயன்படுத்தக் கூடிய வாய்மொழி அல்லாத உடல் மொழிசார் சந்தர்ப்பங்கள் நான்கு தருக.
5) தொலைக்காட்சி ஊடகத்திற்கும் வானொலி ஊடகத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கு தருக.
6) ரவிக்கு கிரிக்கட் விளையாட்டு பற்றி தகவலைப் பெற உதவிய தொலைக்காட்சி ஊடக செய்திகள் உள்ளடங்கும் தகவல் மூலாதார வகையை பெயர் குறிப்பிட்டு அதனை விட வேறு தகவல் மூலாதார வகை மூன்றினையும் உதாரணங்களுடன் குறிப்பிடுக.
7) வேறு சில மாணவர்கள் கிரிக்கட் விளையாட்டு பற்றிய தகவலை / அறிவை இணையத்தின் மூலம் பெறுகை செய்ததாக கூறினார். ஏனைய ஊடகங்களை விடவும் இணையம் மூலம் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
8) ரவியின் கிரிக்கட் அணி போட்டியில் வெற்றியீட்டிய புகைப்படம் ஒன்று செய்திப் பத்திரிகையில் வெளியாகியது. இவ்வாறு செய்திப் பத்திரிகையில் புகைப்படத்தை பயன்படுத்துவதன் நன்மைகள் இரண்டு தருக.
9) செய்திப்பத்திரிகை உள்ளடங்கும் அச்சூடகத்தின் இயல்புகள் நான்கு தருக.
10) பத்திரிகை அச்சூடகத்தில் உள்ளடங்கும் ஒன்றாகும். இது தவிர்ந்த அச்சூடகத்தில் உள்ளடங்கும் ஊடகங்கள் மூன்று தருக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02. 1) ஷெனோன் மற்றும் வீவர் தொடர்பாடல் மாதிரியில் தடை முக்கிய அம்சமாகும். அத்தடையின் இரண்டு பிரதான வகைகளையும் குறிப்பிடுக.
2) ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் நான்கைப் பெயரிடுக.
3) தொடர்பாடலின் பணிகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக.
4) தகவல்களை சேகரிப்பதற்காக பயன்படும் நுட்பமுறைகள் நான்கைத் தனித்தனியாக விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

03. 1) “தொலைக்காட்சி ஊடகமானது தமது ஒளிபரப்பு நேரத்தை ஒரு வருமானமாக ஆக்கியுள்ளது.” நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா? உமது விடைக்கான காரணத்தைத் தருக.
2) “பெறுநரின் விருப்பதற்திற்கு ஏற்ப செய்திகளை தெரிவு செய்திட நவீன ஊடகம் இன்று பெரிதும் துணைபுரிகிறது.” நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா? உங்கள் விடைக்கான இரண்டு காரணங்களைத் தருக.

3) "செய்தி அறிக்கையாளர்கள் தலைகீழ் பிரமிட் வடிவத்தில் தகவல்களை அறிக்கையிடுகின்றனர். நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா? உங்கள் விடைக்கான மூன்று காரணங்களைத் தந்து விளக்குக.

4) "சுவரொட்டியானது பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டமைந்த ஊடகமாகக் காணப்படுவதால் மக்கள் மத்தியில் கவன ஈர்ப்பைப் பெறும் வகையில் அமைந்த ஊடகமாக காணப்படுகிறது." "நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா? உங்கள் விடைக்கான நான்கு காரணங்களை சுருக்கமாக விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

04. ஊடக கழகம் ஒன்றின் வாராந்த கூட்டத்திற்காக மாணவர்கள் ஒன்றுகூடி இருந்தனர். இக் கூட்டம் அக் கழக தலைவரின் கீழ் சிறப்பாக இடம்பெற்றது.

1) இது எவ்வகையான தொடர்பாடல் வகையில் உள்ளடங்குகிறது?
2) மேற்குறிப்பிட்ட தொடர்பாடலின் வெற்றிக்கு பெறுநர்கள் பங்களிக்கக் கூடிய நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக.
3) முறைசாரா தொடர்பாடலானது முறைசார் தொடர்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை மூன்று அம்சங்களின் கீழ் குறிப்பிடுக.
4) கூட்டுத் தொடர்பாடலுக்கும் வெகுஜன தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாட்டை நான்கு அம்சங் களின் கீழ் விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

05. "பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குள் செல்வதற்கு வீதியில் உள்ள மஞ்சள் கோட்டினை பயன் படுத்தினர்."

1) மேற்படி சந்தர்ப்பம் எவ் தொடர்பாடல் வடிவத்தினுள் உள்ளடங்குகிறது?
2) செய்திப் பத்திரிகை ஒன்றின் தலையங்கங்களை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு அம்சங்களைப் பெயரிடுக.
3) புகைப்படம் எடுத்தலில் சில கமராக்களுக்கு புகைப்படச்சுருள் அவசியமாகும். அவ்வாறான புகைப் படச் சுருள்களின் வகைகள் நான்கைக் குறிப்பிடுக.
4) தனிநபர் ஒருவர் உடல்மொழியை பாவித்து அளிக்கக் கூடிய நான்கு வாய்மொழி அல்லாத தொடர் பாடல் முறைகளைப் பெயரிட்டு அவற்றில் ஒன்று பற்றி சுருக்கமாக விபரிக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

06. "இலங்கையில் ஊடகங்களின் செயற்பாடு பற்றி ஊடக ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார்."

1) இது தொடர்பில் இலங்கையின் ஊடகங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி சில அமைப்புக் களுக்கு சட்டரீதியான அந்தஸ்து வழங்கப்பட்டதாக கூறினார். அவ்வாறான அமைப்புக்கள் இரண்டு தருக.

2) மேற்கூறப்பட்ட அமைப்புக்கள் ஊடகங்களின் எவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ளன என்பதற்கு நான்கு காரணங்கள் தருக.

3) "தற்காலத்தில் நவீன ஊடகங்களின் வளர்ச்சியால் இலத்திரனியல் பத்திரிகை பயன்பாடு மக்கள் மத்தியில் அதிகரித்ததாக ஆசிரியர் கூறினார்." இவ் இலத்திரனியல் பத்திரிகையின் மூன்று குணாம் சங்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.

4) "அதிகளவான நாடுகளில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் செயற்பாடு அதிகளவாக காணப்படு கிறது." அவ் வகையில் இத் தொலைக்காட்சி ஊடக விளம்பரங்களால் ஏற்படும் தவறான பாதிப்புக்கள் நான்கை உதாரணங்களுடன் விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

07. ஊடகச் செய்திகளை விமர்சன ரீதியாக ஆராய்வது சிறந்த பெறுநரின் பண்பாகும்.

1) வெகுஜன ஊடகப் பெறுநர்களின் இரண்டு பிரதான வகைகளைப் பெயரிடுக.
2) ஊடகத்தின் மீது துலங்கல்களை முன்வைக்கக் கூடிய முறைகள் நான்கு தருக.
3) வெகுஜன ஊடகங்கள் சிறுவர் மீது ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகள் மூன்றைச் சுருக்கமாக விபரிக்குக.

4) வினைத்திறன் மிக்க பெறுநரிடம் இருக்க வேண்டிய தேர்ச்சிகள் நான்கை விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)